CIKS

# வளம்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் செய்திமடல்

காலாண்டுச் செய்திமடல்

ஜூலை 2010 மலர் 6 இதழ் 2

மேலும் தகவல்களுக்கு **www.ciks.org** என்ற இணையத்தளத்தைப் பார்க்கவும்.



## இயற்கைவழி வேளாண்மைத் தொழில்நுட்பங்கள் - விளக்க வயல்

இயற்கைவழி வேளாண்மை மாதிரி விளக்கப் பண்ணை ஒன்று நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழி தாலுக்காவிலுள்ள இளையமதுக்கூடம் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு இயற்கைவழி வேளாண்மைத் தொழிற்நுட்பங்களை நாகப்பட்டினம் மாவட்ட விவசாயிகளிடையே பரப்புவதே இதன் முக்கிய நோக்கமாகும். இந்த மாதிரி விளக்கப் பண்ணையில் நெல் மற்றும் காய்கறி ரகங்கள், மலர் வகைகள், வாழை, தென்னை போன்ற பல்வேறு பயிர்கள் இயற்கைவழியில் பயிரிடப்பட்டு வருகின்றன. இனக்கவர்ச்சிப் பொறி மற்றும் இயந்திரப் பொறிகளைப் பயன்படுத்துதல், தாவரக் கரைசல்கள், இயற்கை உரங்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகளை உற்பத்தி செய்து பயன்படுத்துதல், செம்மை நெல் சாகுபடி போன்ற பல்வேறு இயற்கைவழி வேளாண்மைத் தொழில்நுட்பங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. இந்தப் பண்ணையில் பாரம்பரிய நெல் ரகங்கள் தொடர்ந்து பயிரிடப்பட்டும் பாதுகாக்கப்பட்டும் வருகின்றன. வயல்களில் உற்பத்தி செய்யப்படும் *அசோலா* கால்நடைகளுக்கும் தீவனமாகப் பயன்படுத்தப்படுகிறது. 25 சென்ட் பரப்பில் அமைக்கப்பட்டுள்ள பண்ணைக் குட்டை மழை நீர் அறுவடைக்கும், பாசனத்திற்கும் உபயோகிக்கப்படுகிறது. கால்நடை தொழுவத்திலிருந்து சேகரிக்கப்படும் கோமியம் பாசன தண்ணீருடன் கலந்து பயிர்களுக்கு விடப்படுகிறது. மண்புழு உரத் தயாரிப்புக் கூடத்தில் (35' x 15') உற்பத்தி செய்யப்படும் மண்புழு உரம் தொடர்ந்து பயிர்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.



*பாரம்பரிய நெல் வயலில் கோனோவீடரைப் பயன்படுத்தி களையெடுக்கும் விவசாயி*

## புதிய திட்டங்கள்

### விவசாயத்தில் எலிக் கட்டுப்பாட்டில் சுற்றுச்சூழலுக்கு உகந்த மேலாண்மை முறைகள்

இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை (DST) "நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழி தாலுக்காவில் விவசாயத்தில் எலிக் கட்டுப்பாட்டில் சுற்றுச்சூழலுக்கு உகந்த மேலாண்மை முறைகள்" என்னும் திட்டத்தை நமது மையத்திற்கு வழங்கியுள்ளது. இந்தத் திட்டம், நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள சீர்காழி தாலுக்காவில் ஜூலை 2010 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், நெல் வயல்களில் எலிகளைக் கட்டுப்படுத்துவதற்கு சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத மேலாண்மை முறைகளைக் கண்டறியவும், எலிக் கட்டுப்பாட்டில் ரசாயனங்களின் பயன்பாட்டைக் குறைத்து, இயற்கை எதிரிகளைப் பாதுகாக்கவும் மற்றும் எலிக் கட்டுப்பாட்டு தொழிற்நுட்பங்களில் விவசாயிகளின் திறனை வளர்ப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

❍ ❍ ❍

### இயற்கைவழி வேளாண்மை மூலம் வாழ்வாதாரத்தை உருவாக்குதல்

வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டிற்கான தேசிய வங்கி (NABARD) "இயற்கைவழி வேளாண்மை மூலம் வாழ்வாதாரத்தை உருவாக்குதல்" என்னும் திட்டத்தை நமது மையத்திற்கு வழங்கியுள்ளது. இந்தத் திட்டம் ஆகஸ்டு 2010 முதல் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள சீர்காழி தாலுக்காவில் செயல்படுத்தப்பட உள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், திறன் வளர்ப்பு பயிற்சிகள், இயற்கைவழி இடுபொருட்களுக்கான தயாரிப்பகங்களை அமைத்தல் மற்றும் இயற்கைவழி சாகுபடிக்கான இடுபொருள் உதவி போன்ற செயல்பாடுகளின் மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு சான்று பெற்ற இயற்கைவழி உணவுப் பொருட்கள்**

*மேலும், விவரங்களுக்கு பார்க்க பக்கம்-4*



# செயல் திட்டங்கள் – ஒரு பார்வை

**காம்பாஸ் திட்டம்**

இந்தத் திட்டம் நெதர்லாந்திலுள்ள இடிசி (ETC) நிறுவனத்தின் உதவியுடன் காஞ்சிபுரம், திருவண்ணாமலை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் மே 2007 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், "செம்மை நெல் சாகுபடியில் உள்ள பிரச்சனைகளும் அதற்கான தீர்வுகளும்" என்ற தலைப்பிலான கலந்துரையாடல் கூட்டம் நாகப்பட்டினம் மாவட்டத்தில் நடத்தப்பட்டது. *ஆடுதுறை-43* நெல் ரகத்தைப் பயன்படுத்தி செம்மை நெல் சாகுபடி குறித்த ஆய்வு இளையான்குடி கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டது. விவசாயத்தில் பெண்களின் பங்கு என்ற தலைப்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் விவர ஆய்வின் ஒரு பகுதியாக நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள ஐந்து பெண்கள் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடல் கூட்டம் நடத்தப்பட்டது. மே 22ஆம் தேதியன்று, நுகர்வோர்களாக விவசாயிகள் சந்திக்கும் பிரச்சனைகள் குறித்த கலந்துரையாடல் கூட்டம் அகணியில் நடத்தப்பட்டது. அல்லிவிளாகம், பாகசாலை மற்றும் அகணி கிராமங்களில் உள்ள பெண்கள் சுய உதவிக் குழுக்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சிகள் நடத்தப்பட்டன. ஆதமங்கலம் கிராமத்தில் சமூக இயற்கைவழி காய்கறித் தோட்டம் அமைப்பது குறித்த அறிமுக கூட்டம் நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து சமூக இயற்கைவழி காய்கறித் தோட்டம் அமைப்பதற்காக 10 சென்ட் நிலத்தைத் தேர்வு செய்து பண்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**பல்வகைமைப் பாதுகாப்பு, பூச்சிக்கொல்லிகளின் அளவைக் குறைத்தல் மற்றும் தமிழ்நாட்டு விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாடு – ஒரு தற்சார்பு முக்கோணம்**

இந்தத் திட்டம் ஐக்கிய நாடுகள் வளர்ச்சி திட்டத்தின் (UNDP – GEF) உதவியுடன் காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திண்டுக்கல் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் நவம்பர் 2008 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், மாதாந்திர விவசாயிகள் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டன. தஞ்சாவூரில் உள்ள ஐஐசிபிடி (IICPT) மையத்துடன் இணைந்து பாரம்பரிய அரிசி ரகங்களைப் பயன்படுத்தி மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாகப்பட்டினம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள பெண்கள் சுய உதவிக் குழுக்களுக்கு அரிசி அப்பளம் தயாரிப்பு குறித்து நான்கு பயிற்சிகள் நடத்தப்பட்டன. நாகப்பட்டினம் மாவட்டத்தில் "இயற்கைவழியில் பாரம்பரிய நெல் ரகங்கள் சாகுபடி" என்ற தலைப்பில் மதிப்பீட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் பாரம்பரிய நெல் ரகங்களான *கருங்குறுவை, பூங்கார்* மற்றும் *சித்திரைக்கார்* 2 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளன. திண்டுக்கல் மாவட்டப் பயனீட்டாளர்களுக்கு ரசாயனப் பூச்சிக்கொல்லிகளின் அளவைக் குறைத்தல் என்ற தலைப்பில் ஐந்து பயிற்சிகள் நடத்தப்பட்டன. இந்தத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள் ஜுன் 17 மற்றும் 18ஆம் தேதிகளில் நிதி நிறுவனத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டன.

**இயற்கைவழி வேளாண்மை மூலம் தமிழ்நாட்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டம்**

இந்தத் திட்டம் மும்பையிலுள்ள ஜாம்செட்ஜி டாடா டிரஸ்டின் (JTT) உதவியுடன் காஞ்சிபுரம், ராமநாதபுரம், திண்டுக்கல் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் மே 2009 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், 26 விவசாயிகள் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. காஞ்சிபுரம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் 33.53 ஏக்கரில் *ஆடுதுறை-43* நெல் ரகத்தைப் பயன்படுத்தி இயற்கைவழி விதை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உண்மைவழி விதை உற்பத்திக்காக காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2 ஏக்கரில் எள் பயிரிடப்பட்டுள்ளது. இடுபொருள் உதவி மற்றும் பயிர்க் கடன் திட்டங்களின் கீழ் 408.57 ஏக்கர் தேர்வு செய்யப்பட்டு இடுபொருட்களும், பயிர் கடனும் வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்களின் கீழ் நெல் ரகங்கள், எண்ணெய் வித்துக்கள், பயறு வகைகள், தானியங்கள், மிளகாய், பருத்தி போன்றவைப் பயிரிடப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் கீழுள்ள நான்கு மாவட்டங்களிலும் 24 ஏக்கரில் மாதிரி விளக்க வயல்கள் உருவாக்கப்பட்டு பல்வேறு இயற்கைவழி தொழில்நுட்பங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அனைத்து விவசாயிகளின் வயல்களிலும் அக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தத் திட்டத்தின் பயனீட்டாளர்களுக்கு 11 குறுகிய காலப் பயிற்சிகளும் 10 பயிற்சியாளர் பயிலரங்குகளும் நடத்தப்பட்டன. நாகப்பட்டினம் மாவட்டப் பயனீட்டாளர்கள் பூனா மற்றும் கர்நாடகாவில் உள்ள இயற்கைவழி பண்ணைகளுக்கும், கடிநெல்வயல் கிராமத்தில் உள்ள மண்புழு உரத் தயாரிப்பகம் மற்றும் இயற்கை உரத் தயாரிப்பகத்திற்கும் அழைத்து செல்லப்பட்டனர். இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் திறனை வளர்ப்பதற்காக நிலக்கோட்டையிலுள்ள சிர்ஹெப் (CIRHEP) மற்றும் திருத்துறைப்பூண்டியிலுள்ள காந்தி அமைதி காப்பு மையத்துடன் இணைந்து பணிபுரியும் விவசாயிகளுக்கு எட்டு பயிற்சிகள் நடத்தப்பட்டன. இதில், பல்வேறு இயற்கைவழி வேளாண்மைத் தொழில்நுட்பங்கள் மற்றும் இயற்கைவழி சான்று பெறுதல் குறித்து பயிற்சியளிக்கப்பட்டது. மேலும், காந்தி அமைதி காப்பு மையப் பயனீட்டாளர்கள் இயற்கைவழி பண்ணைகள் மற்றும் இடுபொருட்கள் தயாரிப்பகங்களுக்கு அழைத்து செல்லப்பட்டனர். இந்தத் திட்டத்தின் கீழுள்ள பயனீட்டாளர் கிராமங்களில் இயற்கைவழி காய்கறித் தோட்டம் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின் முதலாம் ஆண்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு டாடா அறக்கட்டளைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**ஆலங்காடு கிராமத்தில் இயற்கைவழி வேளாண்மையை அறிமுகப்படுத்தும் திட்டம்**

நமது மையம் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள ஆலங்காடு கிராமத்தில் இயற்கைவழி வேளாண்மையை அறிமுப்படுத்தும் திட்டத்தை ஜனவரி 2009 முதல் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் இரண்டாவது பாகம் செப்டம்பர் 2009 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாதாந்திர சங்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. ஏப்ரல் 8ஆம் தேதியன்று, வருவாயை அதிகரிக்கும் முறைகள் என்ற தலைப்பில் பெண்கள் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் ஆலங்காடு கிராம இளம் பெண்களுக்கு தரங்கம்பாடியில் உள்ள ஹோப் (HOPE) நிறுவனத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது. ஆலங்காடு பாசன வாய்க்கால் சுமார் 1.25 கி.மீ. தூரத்திற்கு தூர் வாரி சுத்தம் செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் பயனீட்டாளர்கள் பூனா மற்றும் கர்நாடகாவில் உள்ள இயற்கைவழி பண்ணைகளுக்கும் திருவண்ணாமலையில் உள்ள காடு வளர்ப்பு பகுதிகளுக்கும் அழைத்து செல்லப்பட்டனர். மே 25ஆம் தேதியன்று, மயிலாடுதுறையில் உள்ள வேளாண் பொறியியல் துறை ஆலங்காடு பாசன வாய்க்கால் குழுவின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்தது.

**தற்சார்பு வேளாண்மையை வலுப்படுத்துவதின் மூலம் கிராமப்புற வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் – மானாவாரி சாகுபடிக்கான திட்டம்**

இந்த திட்டம் ஃபோர்டு மற்றும் ஹீவாஸ் நிறுவனங்களின் உதவியுடன் திருவண்ணாமலை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்திற்காக, 13 கிராமங்களில் இருந்து 1237.46 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு இயற்கைவழி வேளாண்மைச் சான்று பெறுவதற்காக தமிழ்நாடு இயற்கைவழி சான்று

# நிகழ்வுகள் - ஒரு அலசல்

துறையில் பதிவுச் செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், 13 சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மாதாந்திர சங்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள களத்துப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த மூன்று விவசாயிகள் மண்புழு உரத் தயாரிப்பு மற்றும் தேனீ வளர்ப்பில் ஈடுபட்டு உள்ளனர். திண்டுக்கல் மாவட்டப் பயனீட்டாளர்களுக்கு இயற்கைவழி வேளாண்மைத் தொழில்நுட்பங்கள் குறித்து ஐந்து பயிற்சிகள் நடத்தப்பட்டன. திண்டுக்கல் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் இருந்து 133 மாதிரி விவசாயிகள் தேர்வு செய்யப் பட்டுள்ளனர். இந்த விவசாயிகளின் வயல்களில் இருந்து மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன. மேலும், மண் நலன் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மிளகாய் சாகுபடியில் இயற்கைவழி வேளாண்மைத் தொழில்நுட்பங்களை நடைமுறைப்படுத்துவதின் மூலம் விவசாயிகளின் வருவாயை அதிகரிக்கும் திட்டம்**

இந்தத் திட்டம் தமிழ்நாடு மாவட்ட அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் குழுவின் (Tamil Nadu State Council for Science and Technology) உதவியுடன் ராமநாதபுரம் மாவட்டத்தில் டிசம்பர் 2009 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் பணிகள் முதுகுளத்தூர் மற்றும் கமுதி தாலுக்காவிலுள்ள கீழத்தூவல், சாம்பக்குளம், சாத்தனூர் மற்றும் கீழக்குளம் கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ், விரிவான அடிப்படைத் தகவல் சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டது. முதுகுளத்தூர் தாலுக்காவில் உள்ள கடமங்கலம் கிராமப் பயனீட்டாளர்களுக்கு ஜுன் 2ஆம் தேதியன்று, இயற்கைவழி மிளகாய் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. இயற்கைவழி மிளகாய் சாகுபடி தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பில் பயிற்சி வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது. இயற்கைவழி மிளகாய் சாகுபடி பற்றின விவரப் பிரசுரங்கள் தயாரிப்பதற்காக, மிளகாய் சாகுபடிக்கான பல்வேறு இயற்கைவழி தொழில்நுட்பங்கள் சேகரிக்கப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளன.

**சுக்கன்கொல்லையில் நடந்த பணிகள்**

சுக்கன்கொல்லையிலுள்ள நமது ஆய்வுப் பண்ணையில் பாரம்பரிய நெல் ரகம், *குள்ளக்கார்* 80 சென்டில் செம்மை நெல் சாகுபடி முறையைப் பின்பற்றி பயிரிடப்பட்டுள்ளது. CO3 தீவனப்புல் மற்றும் வேலிமசால் 45 சென்டில் பயிரிடப்பட்டுள்ளது. பண்ணையில் உள்ள மாதிரி காய்கறித் தோட்டத்தில் வெண்டை, முள்ளங்கி, கொத்தவரை மற்றும் கீரை வகைகள் பயிரிடப்பட்டுள்ளன. பண்ணையில் பாதுகாக்கப்பட்டு வரும் 80 பாரம்பரிய நெல் ரகங்களில் முளைப்புத் திறன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மக்கு உரம் மற்றும் மண்புழு உரத் தயாரிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கத்தரியில் சாறு உறிஞ்சும் பூச்சிகளைத் தாவரக் கரைசல்களைப் பயன்படுத்தி கட்டுப்படுத்துவதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**மானாவாரி விவசாயத்தை மேம்படுத்துவதற்கான முயற்சிகள்**

மானாவாரி விவசாய மேம்பாட்டின் சர்வதேசக் கூட்டமைப்பு (RRA – Network) மண் வளம், நிலத்தடி நீர், சிறு தானியங்கள் போன்ற குறிப்பிட்ட தலைப்புகளின் கீழ் செயலாற்றுவதற்காகக் குழுக்களை உருவாக்கியது. மண்வள மேம்பாடு என்ற தலைப்பின் கீழ் செயலாற்றும் குழுவின் கூட்டம் ஏப்ரல் 6 - 8ஆம் தேதிகளில் ஹைதிராபாத்தில் நடைப்பெற்றது. இதில் நமது மையத்தின் சார்பாக, ஆ.வே. பாலசுப்பிரமணியன், சுபாஷிணி ஸ்ரீதர் மற்றும் கே. சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டு மண் வள மேம்பாட்டில் இயற்கைவழி இடுபொருட்களான மக்கு உரம், மண்புழு உரம், தொழுவுரம் மற்றும் பஞ்சகவ்யம் போன்றவைகளின் பயன்பாடு குறித்த நமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். இதை தொடர்ந்து, மானாவாரி சாகுபடி மேம்பாட்டு திட்ட மையக் குழுவின் கூட்டம் மே 14ஆம் தேதியன்று ஹைதிராபாத்திலும் ஜுன் 3 மற்றும் 4ஆம் தேதிகளில் புது தில்லியிலும் நடைபெற்றன. இதில் நிலத்தடி நீர், சிறுதானியங்கள் மற்றும் மண் வளம் என்ற தலைப்புகளின் கீழ் நடத்தப்பட்ட பயிலரங்குகள் குறித்தும், எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

**சென்னையில் நடைபெற்ற கூட்டம்**

மே 27ஆம் தேதியன்று, ஆ.வே. பாலசுப்பிரமணியன் மற்றும் ந. லலிதா ஆகியோர் உணவுப் பொருள் விநியோகம் மற்றும் தமிழ்நாடு அரசின் நுகர்வோர் பாதுகாப்பு இணையத்தின் ஆணையர் திரு. கே. ராஜா ராமன், இ.ஆ.ப. அவர்களைச் சந்தித்தனர். நுகர்வோர் என்ற அடிப்படையில் விவசாயிகளின் உரிமையைப் பாதுகாப்பதில் நமது மையத்தின் முயற்சிகள் குறித்தும், நுகர்வோர் பாதுகாப்பு மையங்கள் மற்றும் விவசாயிகள் குழுக்களை இணைத்து கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்வதில் அரசாங்கத்துடன் இணைந்து செயல்படுவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்தும் கலந்துரையாடினர்.

**விவசாயிகளும் நுகர்வோர் சட்டங்களும்**

ஜுன் 1ஆம் தேதியன்று, "விவசாயிகளும் நுகர்வோரே" என்ற தலைப்பில் பயிலரங்கு ஒன்று நடத்தப்பட்டது. இந்தப் பயிலரங்கை சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் செல்வி. அகிலா ராமலிங்கம் மற்றும் செல்வி. பா. பூங்குழலி ஆகியோர் நடத்தினர். இந்தப் பயிலரங்கில் மையத்தின் தொழில்நுட்பப் பணியாளர்கள் கலந்து கொண்டனர். இதில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் மற்றும் விவசாயிகளின் உரிமைகள் குறித்த சட்டங்கள் பற்றி விவரிக்கப்பட்டது. நுகர்வோராக விவசாயிகள் தொடர்ந்து சந்திக்கும் பிரச்சனைகள் குறித்தும் விவரமாக விவாதிக்கப்பட்டது.

**வேளாண் பல்வகைமைப் பாதுகாப்பு**

ஜுன் 7ஆம் தேதியன்று, சென்னையிலுள்ள மா.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி மையம் "சீதோஷ்ண நிலை மாற்றங்கள் ஏற்படும் இந்தக் காலகட்டத்தில் வேளாண் பல்வகைமையைப் பாதுகாத்தல்" என்ற தலைப்பில் மாநில அளவிலான கருத்தரங்கு ஒன்றை நடத்தியது. இந்தக் கருத்தரங்கில் நமது மையத்தின் சார்பாக, ஆராய்ச்சி இயக்குனர் கே. விஜயலட்சுமி அவர்கள் கலந்து கொண்டு "தமிழ்நாட்டில் வேளாண் பல்வகைமைப் பாதுகாப்பு - இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் அனுபவங்கள்" என்ற தலைப்பில் உரையாற்றினார்.

**இயற்கைவழி நிலக்கடலைச் சாகுபடி**

நமது மையத்தின் தொழில்நுட்ப ஆதார மையத்தில் ஜுன் 28ஆம் தேதியன்று, இயற்கைவழி நிலக்கடலைச் சாகுபடி குறித்த கலந்துரையாடல் கூட்டம் நடத்தப்பட்டது. இந்தக் கூட்டத்தில் காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திண்டுக்கல் மற்றும் ராமநாதபுரம் மாவட்டப் பயனீட்டாளர்களும் குறிப்பிட்ட மாவட்டக் களப்பணியாளர்களும் கலந்து கொண்டனர். இதில், நிலக்கடலைச் சாகுபடியில் விதை முதல் அறுவடை வரை ஏற்படும் பிரச்சனைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, குறிப்பிட்ட பிரச்சனைகளுக்கான தீர்வுகளும் பரிந்துரைக்கப்பட்டன. இந்தக் கூட்டத்தை ஆலோசகர் திரு. டேனியல் ஆனந்த்ராஜ் அவர்கள் நடத்தினார்.

**செம்மை நெல் சாகுபடி குறித்த கூட்டம்**

நாகப்பட்டினம் மாவட்ட வேளாண் துறை, செம்மை நெல் சாகுபடி மற்றும் ஒருங்கிணைந்த வேளாண்மை என்ற தலைப்பிலான கூட்டத்தை ஜுன் 30ஆம் தேதியன்று மயிலாடுதுறையில் நடத்தியது. இந்தக் கூட்டத்தில் நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 1500 விவசாயிகள் கலந்து கொண்டனர். நமது மையத்தின் சார்பாக சீர்காழி இயற்கை விவசாயிகள் குழு உறுப்பினர்களும், பெண்கள் சுய உதவிக் குழுவினரும் கலந்து கொண்டனர். இதில் நமது மையத்தின் புத்தகங்கள், இயற்கைவழி இடுபொருட்கள் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் பார்வைக்காக வைக்கப்பட்டன.

உங்கள் கருத்துக்கள் மற்றும் விமர்சனங்களை info@ciks.org என்ற மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள்

# புத்தகங்களும் வீடியோ படங்களும்

## இயற்கைவழி சான்றுபெற்ற உணவுப் பொருட்கள் மற்றும் இடுபொருட்கள்




ஆரோக்கியம் ஆர்கானிக்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் தமிழ்நாட்டில் இயற்கைவழி சான்று பெற்ற உணவுப் பொருட்கள் மற்றும் விவசாய இடுபொருட்களின் விற்பனையில் ஈடுபட்டுள்ளது. செங்கல்பட்டை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் இந்த நிறுவனத்தினால் விற்பனை செய்யப்படும் இயற்கைவழி பொருட்கள் அனைத்தும் தேசிய மற்றும் சர்வதேச சான்று வழங்கும் நிறுவனங்களினால் சான்றளிக்கப்பட்டவை ஆகும். அரிசி ரகங்கள், தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்கள், வாசனைப் பொருட்கள், டீ போன்றவை “போஜனம்” என்ற பெயரிலும், இயற்கைவழி விவசாய இடுபொருட்கள் (விதைகள், வேப்பம் பிண்ணாக்கு மற்றும் உயிர் உரங்கள்) “வளம்” என்ற பெயரிலும் விற்பனை செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக விதைச் சான்று மற்றும் இயற்கைவழி சான்று பெற்ற நெல் விதைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நிறுவனம் இதுவாகும்.

இந்தப் பொருட்களை வாங்க விரும்புபவர்கள்
**தொலைபேசி 044-2742 8622 கைபேசி : 99427 96305**
என்ற எண்களை அல்லது **arogyamorganics@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரியைத் தொடர்பு கொள்ளவும். மேலும், விவரங்களுக்கு **www.arogyamorganics.com** என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.

# வருகையாளர் பதிவேடு

- ஏப்ரல் 21ஆம் தேதியன்று, நாகப்பட்டினம் மாவட்டம், சிக்கலில் உள்ள வானவில் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த செல்வி. ரேவதி மற்றும் செல்வி. தேவி ஆகியோர் நமது மையத்திற்கு வந்திருந்தனர்.
- ஏப்ரல் 23ஆம் தேதியன்று, ஆந்திராவிலுள்ள இந்தியத் தேவாலயங்களுக்கான தேசியக் குழுவைச் சேர்ந்த ஆயர் டாக்டர் ஆர்.டேனியல் பிரேம்குமார் அவர்கள் நமது மையத்திற்கு வந்திருந்தார்.
- மே 3ஆம் தேதியன்று, விண்வெளி ஆணையம் / அணுஆற்றல் ஆணையம் / புவி ஆணைய உறுப்பினர் (நிதி) மற்றும் இந்திய அரசாங்க செயலர் திரு. வி.வி. பட், இ.ஆ.ப., அவர்கள் நமது மையத்திற்கு வந்திருந்தார்.
- மே 7ஆம் தேதியன்று, பிரக்ருதி ஆயுர்வேத நிறுவனத்தின் திருமதி. சுஜாதா ராமச்சந்திரன் அவர்களும், சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திரு. கே.எஸ். வைத்தியநாதன் அவர்களும் நமது மையத்திற்கு வந்திருந்தனர்.
- மே 12ஆம் தேதியன்று, காரைக்கால் வேளாண் துறையிலிருந்து ஒன்பது விவசாயிகள் மற்றும் மூன்று பணியாளர்கள் அடங்கிய குழு நமது சீர்காழி திட்டப் பகுதிகளைப் பார்வையிட்டனர்.
- ஜுன் 5ஆம் தேதியன்று, வில்க்ரோ (VILLGRO) நிறுவனத்தின் 28 தொழில்நுட்பப் பணியாளர்கள் சுக்கன்கொல்லையிலுள்ள நமது இயற்கைவழி ஆராய்ச்சிப் பண்ணைக்கு வந்திருந்தனர்.
- ஜுன் 12ஆம் தேதியன்று, ஆப்பிரிக்காவிலுள்ள சியரா லியோன் (SIERRA LEONE) நிறுவனத்திலிருந்து செல்வி. கிளேர் ஹேன்காக் அவர்களும் திருவெண்காட்டில் உள்ள கே.கே.எப்.எப். நிறுவனத்திலிருந்து திரு. பூமுருகேசன் மற்றும் மதுரையிலுள்ள சிசிடி நிறுவனத்திலிருந்து திரு. உலகநாதன் அவர்களும் வந்திருந்தனர்.
- ஜுன் 19ஆம் தேதியன்று, ஸ்வதேஷி ஜக்ரான் மஞ்ச் நிறுவனத்திலிருந்து திரு. கே. வி. நடராஜன், திரு. சுந்தர் மற்றும் திரு. ரவிச்சந்திரன் ஆகியோர் வந்திருந்தனர்.
- ஜுன் 21ஆம் தேதியன்று, மகாராஷ்டிராவில் உள்ள ஏ.டி.எஸ். நிறுவனத்திலிருந்து திரு. ராஜீவ் கேட்கர் அவர்கள் வந்திருந்தார்.
- ஜுன் 23ஆம் தேதியன்று, வில்க்ரோ நிறுவனத்திலிருந்து திரு. பால் பேசில் அவர்களும், திரு. சப்யாசாச்சி அவர்களும் நமது மையத்திற்கு வந்திருந்தனர்.
- ஜுன் 25ஆம் தேதியன்று, சென்னையிலுள்ள நபார்ட் வங்கியின் துணை மேலாளர் திரு. சி.எஸ்.ஆர். மூர்த்தி அவர்களும், பொது மேலாளர் திரு. ஏ. சந்திரசேகர் அவர்களும் வந்திருந்தனர்.

**ஆசிரியர் குழு : இரா. அபர்ணா தூயவதி & டாக்டர் கே. விஜயலட்சுமி** **வடிவமைப்பு : ரா. ஆனந்த் & எஸ். ரமேஷ்**

நூல்-அஞ்சல்

பெறுநர்

CIKS
30, காந்திமண்டபம் சாலை, கோட்டூர்புரம், சென்னை - 600 085.
தொலைபேசி : 91-044-24471087, 24475862
மின்னஞ்சல் : **info@ciks.org** இணையத்தளம் : **www.ciks.org**